# இலங்கைப் பாராளுமன்றம்
# வெற்றிடங்கள் - 2025

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு நல்ல தேகாரோக்கியமும் சிறந்த நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன் கீழ் காணப்படும் மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், கல்வி/ தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவ சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2026 ஜனவரி 05 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில், "**பாராளுமன்றச் செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கோட்டே**" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும். (இந்த விளம்பரத்தினை www.parliament.lk எனும் இணையத்தளத்தின் ஊடாகவும் பெற்றுக்கொள்ளலாம்).

### 1. பிரதிப் பணிப்பாளர் (நிதி) - வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01

### 1.1 சம்பள அளவுத்திட்டம்

2025.03.25 ஆம் திகதிய 04/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 109,090-7x2,940/6x3,900-153,070/-ஆகும். (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப மொத்தச் மாதாந்த சம்பளம் ரூ. 184,000/- ஆகும்.) [மேலே குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம், 2026 மற்றும் 2027 ஆம் ஆண்டுகளுக்கு மேலும் சம்பளத் திருத்தங்களைச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது].

### 1.2. வயதெல்லை

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 25 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச/மாகாண அரச சேவையில் சேவை நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

### 1.3 கல்வித் தகைமைகள்:

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்பட்ட வர்த்தகம், முகாமைத்துவம் அல்லது கணக்கியல் துறையிலான பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

### 1.4 தொழில்சார் தகைமைகள்:-

**அ)** அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தினால்/ இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் (SLIDA) வழங்கப்பட்ட நிதி முகாமைத்துவம்/ கணக்கீடு/பெறுகை ஆகிய துறைகளில் முதுமாணிப் பட்டம் பெற்றிருப்பது மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

**ஆ)** நிதி அமைச்சு / இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் (SLIDA) நடத்தப்படும் CIGAS மற்றும் ITMIS கணினி நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

## 1.5 அனுபவம்:-

இலங்கை கணக்காளர் சேவையின் III/II ஆம் தரங்களில் மொத்தமாக பன்னிரண்டு (12) வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல். (பெறுகை ஏற்பாட்டு நடைமுறையில் (Procurement) அனுபவம் வாய்ந்த விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

## 1.6 ஆட்சேர்ப்பு முறை

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் திறன்களின் பிரகாரம்.

**பரீட்சை நடபடிமுறை**

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையொன்றினால் விண்ணப்பதாரிகளின் தகைமைகள் பரீட்சிக்கப்படும்.

தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையொன்றுக்கு அழைக்கப்படுவார்கள் .நேர்முகப் பரீட்சையின்போது, கீழே குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும். இது தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கை நூறு (100) ஆகும்.

| தொடர் இலக்கம் | அளவுகோல்கள் |
|---|---|
| 1 | மேலதிக கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் |
| 2 | விடய அறிவு |
| 3 | தொழில் அனுபவம் |
| 4 | ஆளுமை மற்றும் நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறன்கள் |

## 2. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்) - (வெற்றிடங்களின் எண்ணிக்கை 02)

## 2.1 சம்பள அளவுத்திட்டம்

2025.03.25 ஆம் திகதிய 04/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 58,660 – 9 x 1,190 / 3 x 1,360 – 73,450/- ஆகும். (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப மொத்த மாதாந்த சம்பளம் ரூ. 97,000/- ஆகும்.) [மேலே குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம், 2026 மற்றும் 2027 ஆம் ஆண்டுகளுக்கு மேலும் சம்பளத் திருத்தங்களைச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது].

## 2.2 வயதெல்லை

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 25 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச/மாகாண அரச சேவையில் சேவை நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

## 2.3 கல்வித் தகைமைகள்:

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தரப்) பரீட்சையில் கணிதப் பிரிவின் கீழ் நான்கு பாடங்களில் (பழைய பாடத்திட்டம்) அல்லது புதிய பாடத்திட்டத்தின் கீழ் மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

**மற்றும்**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி, ஆங்கில மொழி அல்லது ஆங்கில இலக்கியம் மற்றும் கணிதம் ஆகியவற்றுக்கு திறமைச் சித்திகள் உட்பட ஆறு பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல்.

## 2.4 தொழில்சார் தகைமைகள்:

i. தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (NDT)
(மின்னியல்/ இலத்திரனியல்/ தொலைத்தொடர்புகள்)
அல்லது

ii. உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (HNDE)
(மின்னியல்/ இலத்திரனியல்/ தொலைத்தொடர்புகள்)
அல்லது

iii. தேசிய பொறியியல் விஞ்ஞான டிப்ளோமா (NDES)
(மின்னியல்/ இலத்திரனியல்/ தொலைத்தொடர்புகள்)
அல்லது

iv. திறந்த பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப டிப்ளோமா
(மின்னியல்/ இலத்திரனியல்/ தொலைத்தொடர்புகள்)
அல்லது

v. மின்னியல்/ இலத்திரனியல்/ தொலைத்தொடர்புகள் துறையுடன்
தொடர்புடைய NVQ 6 சான்றிதழைப் பெற்றிருத்தல்.

## 2.5 அனுபவம்

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில், இலத்திரனியல்/ஒலி/ஒளி/ தொலைத்தொடர்பு/ஒலி(ளி)பரப்பு/ வளிச்சீராக்கல் மற்றும் குளிரூட்டல் அல்லது அதுபோன்ற துறையொன்றில் தொழில்நுட்ப உத்தியோகத்தராக மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

## 2.6 ஆட்சேர்ப்புச் முறை மற்றும் பரீட்சை நடைமுறை:

எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். நேர்முகப் பரீட்சையில் பின்வரும் அளவுகோல்களின்படி புள்ளிகள் வழங்கப்படும்.

| தொடர் இலக்கம் | விடயப் பரப்பு |
|---|---|
| 1 | மேலதிக கல்வித் தகைமைகள் |
| 2 | மேலதிக தொழில்சார் தகைமைகள் மற்றும் விசேட திறமைகள் |
| 3 | சேவை அனுபவம் |
| 4 | ஆளுமை மற்றும் நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறன்கள் |

3. **மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்/சிங்களம்) - (வெற்றிடங்களின் எண்ணிக்கை 05)**
**மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்/சிங்களம்) - (வெற்றிடங்களின் எண்ணிக்கை 02)**
**மொழிபெயர்ப்பாளர் (ஆங்கிலம்/தமிழ்/ஆங்கிலம்) - (வெற்றிடங்களின் எண்ணிக்கை 03)**

3.1 **சம்பள அளவுத்திட்டம்**

2025.03.25 ஆம் திகதிய 04/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 54,560-3 x 680/10 x 800/4 x1,190 - 69,360/- ஆகும். (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப மொத்தச் மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூ. 92,000.00 ஆகும்.) [மேற்கண்ட சுற்றறிக்கைக்கு அமைய, 2026 மற்றும் 2027 ஆம் ஆண்டுகளுக்காக சம்பளத் திருத்தங்கள் மேலும் மேற்கொள்ளப்படவுள்ளன.]

ஏற்கனவே அரச சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஒரு விண்ணப்பதாரர் இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால், ஒரு வருட பதிற் கடமை சேவைக் காலத்தை நிறைவு செய்த பின்னர், அவரது சம்பளப் படிநிலை முந்தைய சம்பளத்திற்கேற்ப சீரமைக்கப்படும்.

3.2 **வயதெல்லை**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச/மாகாண அரச சேவையில் ஒரு பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

3.3 **கல்வித் தகைமைகள்:**

கல்விப் பொதுத் தராதர (உயர்தரப்) பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) ஒரே தடவையில் 04 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்/ (புதிய பாடத்திட்டத்தில்) ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்;

மற்றும்

கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர)ப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம் மற்றும் தொடர்புடைய மொழித் துறைகளுக்கான பாடங்கள் உட்பட 5 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(தொடர்புடைய மொழித் துறைகள் - மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்/சிங்களம்) பதவிக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் திறமைச் சித்திகளும், மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்/சிங்களம்) பதவிக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் திறமைச் சித்திகளும், மொழிபெயர்ப்பாளர் (ஆங்கிலம்/தமிழ்/ஆங்கிலம்) பதவிக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் திறமைச் சித்திகளும் இருத்தல் வேண்டும்.)

3.4 **தொழில்சார் தகைமைகள்**

கணினி அறிவு தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சான்றிதழ் பெற்றிருத்தல்.

3.5 **அனுபவம்:-**

மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்ததன் பின்னர், அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் மொழிபெயர்ப்பாளராக 5 வருடங்களுக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

3.6 **ஆட்சேர்ப்பு முறை**

எழுத்துமூல மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

**(அ) எழுத்துமூலப் பரீட்சை**

மேற்படி பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் ஓர் எழுத்துமூலப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். இந்தப் பரீட்சை மூலம் விண்ணப்பதாரர்களின் மொழிபெயர்ப்புத் திறன்கள் மதிப்பிடப்படும். இந்தப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை நூறு (100) ஆகும்.

**(ஆ) நேர்முகப் பரீட்சை**

எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்களுக்காக பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் ஒரு நேர்முகப் பரீட்சைச் சபையினால் பின்வரும் அளவுகோல்களின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சையொன்று நடத்தப்படும். அதில் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை நூறு (100) ஆகும்.

| தொடர் இலக்கம் | விடயப் பரப்பு |
|---|---|
| 1 | மேலதிக கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் |
| 2 | விடய அறிவு |
| 3 | நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறன்கள் |
| 4 | தொடர்பாடல் திறன்கள் |
| 5 | அனுபவம் |

## 4 ஆடை அறை உதவியாளர் பதவி- [வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01]

4.1 **தொழிலின் தன்மை**

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பதவியணியினரின் சீருடைகள், திரைச் சீலைகள் உள்ளிட்ட ஆடைகளின் தூய்மை மற்றும் பேணுகையை உறுதிப்படுத்துவது தொடர்பாக, உணவு வழங்கல், வீடு பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து கடமைகளை நிறைவேற்றுவது இந்தப் பதவி மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கமைய, இப் பதவிக்குரிய பிரதான பொறுப்புகளில், சீருடைகள் உள்ளிட்ட ஆடைகளைச் சுத்தம் செய்தல், திருத்துதல் மற்றும் விநியோகித்தலை மேற்பார்வை செய்தல், புடவைகள் தொடர்பான அறிக்கைகள் மற்றும் கையிருப்பு மட்டங்களைச் சரியாகப் பேணுதல் மற்றும் சரியான அறிக்கைகளைப் பேணிவருதல், சலவைப் பட்டியல்களைப் பரிசோதித்தல் மற்றும் தேவைக்கேற்ப ஆடை வகைகளைச் சரியான நேரத்தில் விநியோகித்தல் மற்றும் பதிலீடு செய்தல் என்பன உள்ளடங்கும்.

4.2 **<u>சம்பள அளவுத்திட்டம்</u>**

2025.03.25 ஆம் திகதிய 04/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 42,290-9x490/10x540/6x590-55,640/- ஆகும். (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப மொத்த மாதாந்த சம்பளம் ரூ. 80,000/- ஆகும்.) [மேற்கண்ட சுற்றறிக்கைக்கு அமைய, 2026 மற்றும் 2027 ஆம் ஆண்டுகளுக்காக சம்பளத் திருத்தங்கள் மேலும் மேற்கொள்ளப்படவுள்ளன.]

4.3 **<u>வயதெல்லை</u>**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச/மாகாண அரச சேவையில் சேவை நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

4.4 **<u>கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம்:</u>**

(அ) க.பொ.த. (சா/தர) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழிப் பாடத்தில் திறமைச் சித்தியுடனும் கணிதம் மற்றும் ஆங்கிலப் பாடங்களில் சாதாரண சித்திகளுடனும் சேர்த்து 06 பாடங்களில், இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

ஹோட்டல் வீடு பராமரிப்புத் துறையில் NVQ II மட்டச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

மற்றும்

மேற்குறித்த தகைமைகளைப் பெற்ற பின்னர் இலங்கை சுற்றுலாச் சபை அங்கீகரித்துள்ள நட்சத்திர வகுப்பு ஹோட்டல் ஒன்றில் ஆடை அறை ஊழியர் பதவியிலோ அல்லது சலவைத் தொழில் (லொன்டரி) ஊழியராகவோ ஆறு மாதங்களுக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**<u>அல்லது</u>**

(ஆ) க.பொ.த. (சா/தர) பரீட்சையில், சிங்களம் அல்லது தமிழ் மொழிப் பாடத்தில் திறமைச் சித்தியுடனும் கணிதம் மற்றும் ஆங்கிலப் பாடங்களில் சாதாரண சித்திகளுடனும் சேர்த்து 06 பாடங்களில், இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

மேற்குறித்த தகைமைகளைப் பெற்ற பின்னர் இலங்கை சுற்றுலாச் சபை அங்கீகரித்துள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் ஆடை அறை ஊழியர் பதவியிலோ அல்லது சலவைத் தொழில் (லொன்டரி) ஊழியராகவோ ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**** மேற்குறித்த தகைமைகளுக்கு மேலதிகமாக தையல் பின்னல் வேலைகள் தொடர்பான செய்முறை அறிவு இருப்பது கட்டாயமாகும்.**

## 4.5 <u>ஆட்சேர்ப்பு முறை</u>

எழுத்துமூல/தொழில்திறன் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

(அ) எழுத்துமூல / தொழில்திறன் பரீட்சை

மேற்படி பதவிக்காக விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுள் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் எழுத்துமூல / தொழில்திறன் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். அதன்போது, ஆடைகளைக் களஞ்சியப்படுத்தல், ஆடைகளை சலவை செய்தல், ஆடைகளைத் தைத்தல் ஆகிய துறைகளுக்கு அமைவாக விண்ணப்பதாரர்களின் திறமைகள் நிர்ணயம் செய்யப்படும். இதன்போது 01 மணித்தியால எழுத்துமூல / தொழில்திறன் பரீட்சை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும். அப்பரீட்சையில் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகள் நூறு (100) ஆகும்.

(ஆ) நேர்முகப்பரீட்சை-:

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் ஒரு நேர்முகப் பரீட்சைச் சபையினால் பின்வரும் அளவுகோல்களின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படும். அதில் வழங்கப்படும் ஆகக்கூடிய புள்ளிகள் நூறு (100) ஆகும்.

| தொடர் இல. | விடயப் பரப்பு |
|---|---|
| 1 | மேலதிக கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் |
| 2 | விடய அறிவு |
| 3 | சேவை அனுபவம் |
| 4 | ஆளுமை மற்றும் நேர்முகப் பரீட்சையின் போது வெளிக்காட்டும் திறன்கள் |

## 5 சேவை நியதிகளும் நிபந்தனைகளும்

(i) இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஓய்வூதிய உரித்துடையது. இந்தப் பதவிகளுக்கு ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் ஆரம்பத்தில் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாக நியமிக்கப்படுவார்கள். அரச சேவையிலோ அல்லது மாகாண அரச சேவையிலோ நிரந்தரமான ஓய்வூதிய உரித்துடைய பதவியொன்றில் சேவையாற்றிய விண்ணப்பதாரரொருவர் அல்லது பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஒரு விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர் ஒரு (01) வருட பதிற் கடமை காலத்திற்கு உட்பட்டு நியமிக்கப்படுவார்.

(ii) நியமிக்கப்படும் எண்ணிக்கையும் நியமனங்கள் செயல்வலுப் பெறும் திகதியும் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாதிருக்க பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கு அதிகாரம் உள்ளது.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பதவியணிக்கு ஏற்புடைய நிதி மற்றும் திணைக்கள ஒழுங்கு விதிகளுக்கு இயைந்தொழுகுதல் வேண்டும்.

(iv) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்படுகின்ற விகிதாசாரத்திற்கு அமைய விதவைகள் / தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு தமது சம்பளத்திலிருந்து பங்களிப்புத் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

(v) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(vi) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் தொடர்பான பாதுகாப்பு பற்றிய சான்றறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

6. விண்ணப்பதாரர்கள் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப் பிரதிகள் அல்ல) தமது விண்ணப்பங்களுடன் இணைத்தனுப்புதல் வேண்டுமென்பதுடன், மூலப் பிரதிகளைக் கோரும் பட்சத்தில் அவற்றைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ்

(ஆ) தேசிய அடையாள அட்டையின் பிரதி

(இ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்

(ஈ) தொழில்சார் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்

(உ) அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்

7. அரச/மாகாண அரச சேவையில் பணிபுரிகின்ற விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தொடர்புடைய திணைக்கள / நிறுவனத் தலைவரின் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

8. பதவியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்தில் ஏதேனுமொரு வகையில் செல்வாக்கைப் பிரயோகித்தலானது தகுதியின்மைக்கு வழிவகுக்கும்.

9. விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் தவறானதென்று ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்னர் கண்டறியப்படுமிடத்து, அவர் தகுதியற்றவரென குறிப்பிடப்படுவதற்கும், நியமிக்கப்பட்டதன் பின்னர் அவ்வாறு கண்டறியப்படுமிடத்து சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் அது காரணமாக அமையும்.

10. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் அல்லது மேலே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளின்றி அனுப்பப்படும் அல்லது திணைக்கள / நிறுவனத் தலைவர்களினூடாக அனுப்பப்படாத (தற்போது அரச/ மாகாண அரச சேவையில் சேவை செய்பவராயின்) அல்லது பதவிக்கான மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் திணைக்கள / நிறுவனத் தலைவர்களினூடாக அனுப்பப்படும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

11. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படும் இந்த வர்த்தமானி அறிவித்தலின் மொழிகளுக்கிடையே ஏதேனும் பொருத்தமின்மை அல்லது ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவித்தலுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

**குஷானி ரோஹணதீர**
பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

இலங்கைப் பாராளுமன்றம்
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.
2025 டிசம்பர் மாதம் ஆம் திகதி.

# இலங்கைப் பாராளுமன்றம்

## மாதிரி விண்ணப்பப் படிவம்

## ............................................................ பதவி

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) : .........................................................................................

   (ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (தமிழில்) : .........................................................................

   (இ) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்):- *(திரு/திருமதி/செல்வி)*.......................................

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3. (அ) (i) தனிப்பட்ட முகவரி : .........................................................................................

   ..........................................................................................................................................

   ..........................................................................................................................................

   (ii) மின்னஞ்சல் முகவரி (e-mail) : .........................................................................

   (iii) தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

   (iv) WhatsApp தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

   (ஆ) (i) அலுவலக முகவரி : .........................................................................................

   ..........................................................................................................................................

   ..........................................................................................................................................

   (ii) தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

   (இ) பரீட்சைக்கான அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரியை தயவுசெய்து குறிப்பிடுக.

   தனிப்பட்ட ☐ அலுவலக ☐

4. (அ) பிறந்த திகதி : ஆண்டு.............. மாதம்.............. திகதி..............

   (பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)

   (ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது : வருடங்கள்....... மாதங்கள்....... நாட்கள்.......

5. சிவில் அந்தஸ்து (விவாகமானவர்/விவாகமாகாதவர்): .........................................................................

6. பால் (ஆண்/பெண்) : .........................................................................

7. இலங்கைப் பிரசையா : (ஆம்/இல்லை)

8. கல்வித் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| **பட்டம்** | **நிறுவனம்** | **செயல்வலுப் பெறும் திகதி** |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

| **பரீட்சை** | **பாடங்கள்** | **சித்தி** | **ஆண்டு** |
|---|---|---|---|
| க.பொ.த (உ/தரம்) | | | |
| | | | |
| | | | |
| | | | |
| க.பொ.த (சா/தரம்) | சிங்களம்/தமிழ் | | |
| | கணிதம் | | |
| | ஆங்கிலம் | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

9. தொழில்சார் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| **பாடநெறி** | **நிறுவனம்** | **காலப்பகுதி** | **செயல்வலுப்பெறும் திகதி (Effective date)** |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

10. வேறு தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)
.......................................................................................................................................................
.......................................................................................................................................................
.......................................................................................................................................................
.......................................................................................................................................................

11. அனுபவம் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| **நிறுவனம்** | **பதவி** | **சேவைக் காலம்** |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

12. தற்போதைய தொழில் பற்றிய விபரங்கள் (சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இணைக்கப்படுதல் வேண்டும்)

(அ) நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி : ...........................................................................
(ஆ) முதல் நியமனத் திகதி : ...........................................................................
(இ) தற்போது வகிக்கும் பதவி : ...........................................................................
(ஈ) மாதாந்த அடிப்படைச் சம்பளம் : ...........................................................................
(உ) கொடுப்பனவுகள் : ...........................................................................
(ஊ) முழுமொத்த சம்பளம் : ...........................................................................

13. நீங்கள் ஏதேனும் குற்றச்செயல் தொடர்பில் நீதிமன்றத்தில் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீர்களா? (ஆம் / இல்லை)
அவ்வாறாயின், அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக : ......................................................................
..............................................................................................................................................

14. இதற்கு முன்னர் அரசாங்கத்தின் கீழ் பணியாற்றியுள்ளீர்களா? (ஆம் / இல்லை)
அவ்வாறாயின், அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக : ......................................................
..............................................................................................................................................

இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் தரப்பட்டுள்ள ஏதேனுமொரு விபரம் பொய்யானது அல்லது தவறானது என நான் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் கண்டறியப்பட்டால், இந்தப் பதவிக்கு தகுதியற்றவனாவேன் என்றும் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் கண்டறியப்பட்டால் எதுவித நட்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்றும் நன்கறிவேன்.

திகதி: ................................. .............................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

**திணைக்கள/ நிறுவனத் தலைவரின் விதப்புரை**

**(அரச / மாகாண அரச சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்.)**

பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அவர்களுக்கு,

இந்த நிறுவனத்தில் ........... ........ ......... .......... .......... .......... ........... ........... ........... ........... ........... ......... ........... ...... பதவியை வகிக்கின்ற திரு/திருமதி/செல்வி ....... ...... ........... ........... ............. ............ ............ ......... ................. அவர்களின் விண்ணப்பத்தை விதப்புரை செய்து சமர்ப்பிக்கின்றேன். இவர் உரிய பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார் / நிரந்தரமாக்கப்படவில்லை எனவும், இவரின் வேலை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானது எனவும், இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதுமில்லை எனவும், இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளும் அபிப்பிராயமில்லை எனவும் உறுதிசெய்கின்றேன். இவர் இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவாராயின், இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. (தயவு செய்து பொருத்தமற்ற சொற்களை வெட்டி விடவும்.)

திகதி: .................................... .....................................................

திணைக்கள / நிறுவனத் தலைவரின் கையொப்பம்

(உத்தியோகபூர்வ முத்திரை)